**கிழக்கு மாகாண சபை - 2023**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கிழக்கு மாகாண சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23 (2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் உப பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பொழிப்பு அறிக்கை 2024 யூலி 17 ஆந ஆந் திகதி வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும் அறிக்கையின் பிரதியானது 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையிலும் முன்வைப்பதற்காக ஆளுனருக்குச் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியாக்கப்பட்ட அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிழக்கு மாகாண சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | குத்தகைக்கு எடுக்கப்பட்ட வாகனங்கள் மீதான ரூபா 51.74 மில்லியன் திரண்ட வட்டி 2018 திசெம்பர் 31 இல் கொம்ரோலர் நாயகத்தின் அலுவலகத்தால் வெளியிடப்பட்ட நிதியல்லா சொத்துக்களை மதிப்பிடுவதற்கான வழிகாட்டலின் 1.2.2 ஆம் பந்திக்கு முரணாக 2019 ஆம் ஆண்டு முதல் நிதியல்லா சொத்துக்களில் சேர்க்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, மீளாய்வாண்டிற்கான நிதி | குத்தகை மீதான வட்டியினை நிதியல்லாச் சொத்துக்களிலிருந்து வெளியகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அத்தகையை வட்டியை நிதியல்லாச் சொத்துக்களிலிருந்து வெளியகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிலைமைக் கூற்றில் நிதியல்லா சொத்துக்களின் பெறுமதி அந்தத் தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்களின் நிர்மாணப் பணிகளுக்கான ரூபா 6.54 மில்லியன் தொகையான மேலதிகமாக செலுத்தப்பட்ட மிகைக் கட்டணம் மீளாய்வாண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்றில் பொது முதலீட்டுச் செலவினமாகக் காட்டப்பட்டுள்ளது. இதனால் நிதிக்கூற்றுக்களில் பொது முதலீட்டுச் செலவினம் அந்தத் தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | பரீட்சை மீதியிலுள்ள திரட்டிய பொழிப்பு மீதிகளுக்கு அமைவாக நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டது. | கொள்ளல் செய்யப்பட்ட சொத்துக்களின் உண்மையான கிரயத்தை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்காக 02 நியதிச்சட்ட அதிகாரசபைகளால் ஈட்டப்பட்ட ரூபா 38.87 மில்லியன் கூட்டுமொத்தமான பல்வேறு வகையான வருமானங்கள் நிதிச் செயலாற்றல் கூற்றிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை யாதலால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் மொத்த வருமானம் அந்தத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்படும். | வருமானமானது சரியாக கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | 02 நியதிச்சட்ட அதிகாரசபைகளின் ரூபா 11.25 மில்லியன் கூட்டுமொத்தமான காசு மற்றும் காசிற்கு சமமான மீதிகள் மீளாய்வாண்டிற்கான நிதி நிலைமைக் கூற்றிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை யாதலால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் அத்தகைய காசு மற்றும் காசிற்கு சமமான மீதிகள் விடுபட்டிருந்தன. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | காசும் காசுக்குச் சமனானவற்றினதும் மீதி நிதிக்கூற்றுக்களில் சரியாகக் காட்டப்பட்டிருத்தல் வேண்டும். |
| (உ) | முன்பள்ளிக் கல்விப் பணியகத்தின் ரூபா 5.85 மில்லியன் கூட்டுமொத்தமான வைப்பு மீதிகள் வைப்புக்களாக காட்டப்படுவதற்குப் பதிலாக மாகாண வருமான கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. இதனால் மீளாய்வாண்டிற்கான நிதி நிலைமைக் கூற்றுக்களில் | இத் தவறினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வைப்புக்கள் சரியாகக் கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடைமுறைப் பொறுப்பு மீதிகள் குறைத்தும் மற்றும் நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானமானது கூட்டியும் காட்டப்பட்டிருந்தன. | | |
| (ஊ) | 02 நிறுவனங்களின் மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடை (PSDG) பணிகளுக்காக ரூபா 5.75 மில்லியன் தொகைக்கு கடப்பாடு ஏற்படுத்தப்பட்ட விலைப்பட்டியல்கள் மீளாய்வாண்டிற்கான நிதி நிலைமைக் கூற்றிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை யாதலால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்பு அந்தத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | கையிலிருந்த சீட்டைகள் மற்றும் தொடர்ச்சியான வேலைகள் அறிக்கையிடப்பட்டது. | பொறுப்புக்கள் சரிவர இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |
| (எ) | 02 ஆணைக்குழுக்கள், 05 அமைச்சுக்கள், 09 செயலகங்கள் மற்றும் 18 திணைக்களங்களின் ரூபா 2.48 மில்லியன் பெறுமதியான பல்வேறு பொருட்கையிருப்பு உருப்படிகள் மீளாய்வாண்டில் அகற்றப்பட்டிருந்த போதிலும் அவற்றின் வரலாற்று கிரயம் நிதியல்லா சொத்துக்களில் சேர்க்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக, மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் நிதியல்லா சொத்துக்களின் பெறுமதி அந்தத் தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | இத்தவறினை சீர் செய்வதற்கு எதிர்வரும் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும். | அகற்றப்பட்ட உருப்படியின் கிரயத்தினை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஏ) | மாகாணத்தின் 02 ஆணைக்குழுக்கள், 05 அமைச்சுக்கள், 09 செயலகங்கள் மற்றும் 18 திணைக்களங்களினால் பொறுப்பு ஏற்படுத்தப்பட்ட ரூபா 75.64 மில்லியன் தொகை நிதி நிலைமைக் கூற்றிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை யாதலால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்புக்கள் அந்தத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன | அத்தகைய நிறுவனங்களில் தகவல்கள் தரப்பட்டிருக்காமையால் கணக்கு வைக்கப்பட முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்கள் சரியாக கணக்கு வைக்கப்பட்டிருக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 **நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும்பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மூலதத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கிழக்கு மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன.

நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல ்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்

  எனது கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உளள்கக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 1.5. 1தலைப்பு - 9 00ஆளுநர் செயலகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 03 உத்தியோகபூர்வ வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு ஆளுநர் அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும் கிழக்கு மாகாண ஆளுநர் 2018 ஒக்தோபர் 12 ஆம் திகதிய பிஎஸ்/சீஎஸ்ஏ/11-18 ஆம் இலக்க சனாதிபதி செயலக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்திக்கு முரணாக சனாதிபதியின் செயலாளரிடமிருந்து அனுமதியை பெற்றுக்கொள்ளாமல் 04 உத்தியோகபூர்வ வாகனங்களைப் பயன்படுத்தியிருந்தனர். | விசேட கலந்துரையாடல்களில் பங்குபற்றிய நோக்கத்திற்காக இவ் வாகனங்கள் உபயோகிக்கப்பட்டிருந்தன. | சனாதிபதியின் செயலாளர் அவர்களினால் வெளியிடப்பட்ட குறிப்பிட்ட சுற்றறிக்கைக்கு அமைவாக வாகனங்கள் ஒதுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2022 சனவரி 01 முதல் 2023 மே 21 வரையிலான காலப்பகுதியில் ஆளுநரின் பல்வேறு பதவியணியினரால் பயன்படுத்தப்பட்டிருந்த 06 உத்தியோகபூர்வ வாகனங்களுக்காக ரூபா 2.09 மில்லியன் கூட்டுமொத்தமான எரிபொருள் செலவினங்கள் 2018 | பாதுகாப்பு மற்றும் குழாம் போன்ற நோக்கங்களுக்காக இவ்வாகனங்கள் உபயோகிக்கப்பட்டிருந்தன. | சனாதிபதியின் செயலாளர் அவர்களினால் வெளியிடப்பட்ட குறிப்பிட்ட சுற்றறிக்கைக்கு அமைவாக வாகனங்கள் ஒதுக்கப்படுதல் |

| | | |
|---|---|---|
| ஒக்தோபர் 12 ஆம் திகதிய பிஎஸ்/சீஎஸ்ஏ/11-18 ஆம் இலக்க சனாதிபதி செயலக சுற்றறிக்கையின் 4.3 ஆம் பந்தியில் நிர்ணயிக்கப்பட்டிருந்த எரிபொருள்களுக்கான உச்ச எல்லைக்கு மேலதிகமாக மீள்நிரப்பு செய்யப்பட்டிருந்தன. | | வேண்டும். |

**1.5. 2தலைப்பு 901 –-மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2009 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்து (திருத்த) சட்டத்தின் 203 ஆம் அத்தியாயத்திற்கு முரணாக மாகாண பொது சேவை ஆணைக்குழுவின் 2022 ஆம் ஆண்டில் மூதூரில் விபத்துக்குள்ளாக்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ குழாம் வாகனத்தின் இயந்திர பகுதி பதிலீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், மேற்படி நடத்தைகள் தொடர்பான நடவடிக்கைகள் ஒரு வருடமாக எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கராஜ் உரிமையாளரினால் இயந்திரப்பகுதி பதிலீடு செய்யப்பட்டது. | குறிப்பிட்ட மோட்டார் போக்குவரத்து சட்டத்திற்கமைவாக நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

**1.5. 3தலைப்பு - 921 பிரதிப் பிரதம செயலாளர் செயலகம்- நிதி**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மொத்த சேகரிக்கப்பட்ட வருமானத்தில் 47 சதவீதமாக இருந்த ரூபா 1,581.45 மில்லியன் கூட்டுமொத்தமான பல்வேறு வகையான வருமானங்கள் சிகாஸ் மென்பொருளைப் பயன்படுத்திக் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக கைமுறையாகப் பதிவு (Manual) செய்யப்பட்டிருந்ததமையால் மொத்த உண்மையான வருமான சேகரிப்பை கணக்காய்வின் போது திருப்திகரமாக ஏற்று உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | 2024 ஆம் ஆண்டிலிருந்து நடவடிக்கை எடுக்கப்படும். | சிகாஸ் மென்பொதி முறைமையினுடாக சகல வருமானங்களையும் பதிவுக்குட்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டில் வணிக முற்பணக் கணக்கு நடவடிக்கைகளின் நிலுவையாக உள்ள ரூபா 36.90 மில்லியன் கூட்டுமொத்தமான கடன் மீதிகள் 04 திணைக்களங்களால் தீர்க்கப்பட்டிருக்காதிருந்தன. | 2024 ஆம் ஆண்டிலிருந்து நடவடிக்கை எடுக்கப்படும். | காலதாமதமின்றி வணிக முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்படுதல் வேண்டும் |
| (இ) | 08 நிறுவனங்களுக்குரித்தான 81 காணிகள், 98 வாகனங்கள், 71 மோட்டார் சைக்கிள்கள், 66 பதவியணியினர் விடுதிகள், 28 அலுவலகக் கட்டிடங்கள் மற்றும் 51 நீர் தொட்டிகள் 05 முதல் 10 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | இத்தகைய சொத்துக்களை பெறுமதியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அச் சொத்துக்களை பெறுமதியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 1.5. 4தலைப்பு - 926 மாகாண உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் அமைச்சுக்கள் மற்றும் பல்வேறு திணைக்களங்களுக்கு உள்ளக கணக்காய்வாளர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் மாகாண சபையின் திணைக்களத் தலைவர்களுக்கு செய்யப்பட்ட பரிந்துரைகள் மற்றும் உள்ளக கணக்காய்வு அவதானிப்புகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விபரங்கள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | உள்ளக்கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவதற்கும் அவற்றின் மீது நடவடிக்கைகளும் எடுக்கப்படுதல் வேண்டும். |

### 1.5. 5தலைப்பு - 930 – விவசாய அமைச்சு

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண விவசாய அமைச்சினால் சேதன உரம் தயாரிக்கும் நோக்கத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 17.67 மில்லியன் கூட்டுமொத்தமான 30 நிலையான துண்டாக்கும் இயந்திரங்களினை (static shredder machines) இயக்குவதற்கு தேவையான நான்கு சக்கர உழவு இயந்திரம் கிடைத்திருக்காமையினால் அவற்றை | வேறு நிறுவனங்களுக்கு இச் சொத்துக்களை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பயன்பாட்டிற்குரிய திட்டம் சாத்தியப்பட்டு ஆய்வுகளுக்கமைவாக கொள்வனவு செய்யப்படுதல் வேண்டும். |

குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்காது 02 ஆண்டுகளிற்கு மேல் விளைவற்றிருந்தன.

### 1.5. 6தலைப்பு - 931 விவசாயத் திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திருகோணமலை மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் ரூபா 1.05 மில்லியன் பெறுமதியான 02 ரோட்டோவேட்டர் (Rotovator) 07 மாதங்களுக்கு மேலாக குறித்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படாமல் விளைவற்றிருந்தன. | சாரதி பற்றாக்குறை காரணமாக பயன்பாடின்றி விடப்பட்டுள்ளது. | குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | கரடியனாறு பயிற்சி நிறுவனத்தின் காளான் அலகுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 999,649 பெறுமதியான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்காது தொழில்நுட்ப பிழைகள் காரணமாக 5 ஆண்டுகளாக விளைவற்றிருந்தன. | பயன்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ப்படுகின்றன. | குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | அரச சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கபட்டிருக்கவேண்டிய உதவி விவசாய பணிப்பாளர் பதவிக்குவிவசாய போதனாசிரியராக கடமையாற்றி வந்த அலுவலர் ஒருவர் விவசாய அமைச்சின் செயலாளரினால் கடமையை கவனித்தல் எனும் அடிப்படையில் நியமிக்கப்பட்டு 05 யூன் 2023 தொடக்கம் 24 யூன் 2024 வரையான காலப்பகுதிக்கு கூட்டுமொத்தம் ரூபா 1.08 மில்லியன் ஆளணி வேதனாதிக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் 03 பதவிநிலைத்தரத்திலான அலுவலர்கள் ஒவ்வொருவரும் சேர்ந்து பிரயாணிப்பதற்கு பதிலாக நாளாந்தம் தனித்தனியாக குழாம் வாகனத்தினை பயன்படுத்தி அலுவலகத்திற்கு பிரயாணிப்பதற்கும் அனமதிக்கப்பட்டிருந்த வேளை 21 ஏப்ரல் 2023 அன்று | விசாரணை மேற்கொள்ளப்படும் | உரிய அனுமதிக்கமைவாக பதவிக்கு நியமிக்கபட்டிருக்கவும் விசாரனையினை உரிய காலத்தில் நிறைவேற்ற படுவதற்கும் நடவடிக்கை எடுக்கபடுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| அவ்வாகனத்திற்கு விபத்து ஏற்பட்டிருந்தது ஆனால் இது தொடர்பலான விசாரணைகள் 01 வருடத்திற்கு மேலாக தாமதமாகியிருந்தன. | | |

**1.5.7 தலைப்பு - 934 நீர்ப்பாசனத் திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுமொத்தம் ரூபா 2.33 மில்லியன் இணங்கப்பட்ட ஒப்பந்த விலையில் விவசாய அமைப்பொன்றுக்கு வழங்கப்பட்டிருந்த பொத்துவில் நாவுல திட்டத்தின் கால்வாய் முறைமையை மேம்படுத்தும் பணிகள் மீளாய்வாண்டில் தளத்தை அணுகுவதற்கான சாத்தியவள ஆய்வில் உள்ள பலவீனங்கள் காரணமாக கைவிடப்பட்டிருந்தது. | பருவபெயர்ச்சி மழை மற்றும் சேலைத்தளத்தினை அடைந்து கொள்ளலில் ஏற்பட்ட இடர்பாடுகளினால் பரஸ்பர உடன்பாட்டுடன் ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்த உடன்படிக்கைக்கு அமைவாக வேலைகள் உரிய காலத்தில் நிறைவேற்றபடுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

**1.5. 8தலைப்பு - 941 கல்வி திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஏனைய திணைக்களங்கள், மாகாண சபைகளிற்கு இடமாற்றப்பட்டிருந்த/ அவற்றிலிருந்து இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்கள், ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள், இறந்த உத்தியோகத்தர்கள், பணி இடைநிறுத்தம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் பதவி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 15.39 மில்லியன் கூட்டுமொத்தமான மாகாணக் கல்வித் திணைக்களத்தில் நிலுவையாக உள்ள பதவியணியினர் கடன் மீதிகள் 01 முதல் 10 வரையான ஆண்டு காலப்பகுதியில் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | அந் நிலுவைகளைச் சேகரிப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | நிலுவையாகவுள்ள கடன் மீதிகளை அறவிடுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) பட்டதாரி பயிற்சியாளர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த கூட்டுமொத்தம் ரூபா 11.49 மில்லியன் படிகளின் மேலதிக கட்டணம் 04 ஆண்டுகளிற்கு மேலாக பொது திறைசேரிக்கு தீர்ப்பனவு செய்யப்படாமல் மாகாண கல்வி | மீதியானது பொதுத் திறைசேரிக்கு தீர்ப்பனவு செய்யபடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | பொது திறைசேரிக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | 17 வலயக் கல்வி அலுவலகங்கள் மற்றும் மாகாணக் கல்வித் திணைக்களத்தில் ரூபா 13.08 மில்லியன் கூட்டுமொத்தமான கேள்வி வைப்பு, பிடித்துவைத்தல் பணம் மற்றும் நானாவித வைப்பு மீதிகள் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் 02 ஆண்டுகளிற்கு மேலாக நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் பொது வைப்பு கணக்குகளில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் | நிதிப் பிரமாணம் இலக்கம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | "அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" எனும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் திருகோணமலை மற்றும் கல்குடா வலயக் கல்வி அலுவலகங்களின் 03 பாடசாலைகளில் அமுல்ப்படுத்தப்பட்ட ரூபா 18.25 மில்லியன் இணங்கப்பட்ட ஒப்பந்த விலையில் வழங்கப்பட்டிருந்த அபிவிருத்தி வேலைகள் மீளாய்வாண்டில் பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளுக்காக ரூபா 1.98 மில்லியன் கொடுப்பனவுடன் கைவிடப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் அதற்கான காரணங்களும் கணக்காய்வுக்கு அறியக் கிடைத்திருக்கவில்லை. | கருத்துரைக்கப் பட்டிருக்கவில்லை. | ஒப்பந்த உடன்படிக்கை மற்றும் சாத்தியப்பாட்டு ஆய்வுக்கமைவாக வேலைகள் நிறைவேற்றப்படுதல் வேண்டும். |
| (உ) | சத்துணவு நிகழ்ச்சித்திட்டம், மாகாணக் குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியப் பணிகள், பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்றிட்டப் பணிகள் மற்றும் யுனிசெவ்வின் செயற்றிட்டப் பணிகள் ஆகியவற்றுக்காக மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் மீளாய்வாண்டு மற்றும் நேர் முன்னைய ஆண்டுகளில் பெறப்பட்டிருந்த ரூபா 96.97 மில்லியன் கூட்டுமொத்தமான | இத்தகைய குறைபாடுகள் எதிர்காலத்தில் மீள எழாதவாறு கருத்திலெடுக்கப்பட்டுள்ளது. | குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்குரிய கட்டு நிதி பயன்படுத்தப் படுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டுநிதி குறித்துரைக்கப்பட்ட செயற்றிட்டப் பணிகளிற்காக பயன்படுத்தப்படாமல் அரசாங்க உத்தியோகத்தரின் முற்பணக் கொடுப்பனவிற்காகவும் பொது வைப்பு மீதிகளைத் தீர்ப்பனவு செய்வதற்காகவும் பயன்படுத்தப்பட்டிருந்தன. | | |
| (ஊ) | ஆசிரியர்களுக்கான 19 பதவியணியினர் விடுதிகள் மீளாய்வாண்டில் ரூபா 18.67 மில்லியன் கூட்டுமொத்தத்திற்கு புனரமைக்கப்பட்டிருந்த போதிலும் குறித்துரைத்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்காது விளைவற்றிருந்தன. | சீர் செய்யப்படும் | விடுதிகள் குறித்த நோக்கத்திற்கு உபயோகிபக்கப்படுவதற்குரிய நடவடிக்கை எடுக்கபடுதல் வேண்டும். |

**1.5. 9தலைப்பு - 951 சுகாதார சேவைகள் திணைக்களம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2009 ஏப்ரல் 16 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 09/2009க்கு முரனாக மீளாய்வாண்டில் கைவிரலடையாளப் பதிவு இயந்திரங்களை பயன்படுத்தி உள்வருகை மற்றும் வெளிச் செல்கைகள் உறுதிப்படுத்தப்பட்டிருக்காது, சுகாதாரத் துறையால் ரூபா 2,280 மில்லியன் கூட்டுமொத்தமான விடுமுறை நாட்கொடுப்பனவு கொடுப்பனவுகள் மற்றும் மேலதிக நேர படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | உபயோகப்படுத்துவதற்கு தோவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | சுற்றறிக்கைக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | மகாஓய மற்றும் தெகியத்தைக்கண்டி ஆதார வைத்தியசாலைகளின் தாதிய உத்தியோகத்தர்களுக்கு வாடகைக்கு விடப்பட்டிருந்த அலுவலக விடுதிகளினது மின்சாரம் மற்றும் நீர் கட்டணங்கள் குடியிருப்பாளர்களால் செலுத்தப்பட வேண்டிய போதிலும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு முரணாக 2019 | விடுதிக்கான வாடகை அறவிடப்பட்டுள்ளது. | நீர் மற்றும் மின்சாரக்கட்டணங்களை அவ் உத்தியோகத்தர்களிடம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சனவரி முதல் 2023 மார்ச் வரையிலான காலப்பகுதியில் அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் கூட்டுமொத்தம் ரூபா 4.39 மில்லியன் அத்தகைய கட்டணங்களுக்காக செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (இ) | வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் 2019 ஆம் ஆண்டில் ரூபா 50.55 மில்லியன் பெறுமதியில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் வைத்திய நிபுணர்கள் மற்றும் துணை மருத்துவ பதவியணியினரின் பற்றாக்குறை காரணமாக இப்பிரிவைச் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமையால் 04 ஆண்டுகளாக எதிர்பார்த்த விளைவை அடைந்துகொள்ள முடியாதிருந்தது. | மருத்துவ அலுவலர்களின் பற்றாக்குறை காரணமாக பயன்படுத்தப்பட முடியாதிருந்தது. | பராமரிப்பு பிரிவினை உபயோகப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

## 1.5. 10தலைப்பு - 961 வீதி அபிவிருத்தி திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 88.06 மில்லியன் கூட்டுமொத்தமான 04 லொறிகள் மற்றும் 18 இயந்திரங்கள் 02 முதல் 05 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் பல்வேறு அலுவலகங்களில் வர்த்தக நடவடிக்கைகளுக்கு குறித்துரைத்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்காது விளைவற்றிருந்தன. | வாடகை கட்டணத்தினை அதிகரிக்கும் பொருட்டு அவை எதிர்காலத்தில் வாடகைக்கு விடப்படும். | குறிக்கப்பட்ட நோக்கத்திற்கு உபயோகப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

## 2. நியதிச்சட்டக் கணக்குகள்

### (அ) சுற்றுலாப் பணியகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இந்த மாகாணத்தில் 48 சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடங்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2016 மார்ச் 18 இன் 1985/73 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் IV(அ) பகுதியின் பிரகாரம் 10 முக்கிய பணிகளைச் செய்வதற்கு அல்லது கடந்த 05 ஆண்டுகளில் அதன் சொந்த வருமானத்தை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை பணியகத்தின் பல்வேறு நடவடிக்கைகளுக்காக கூட்டுமொத்தம் ரூபா 128.40 மில்லியன் மாகாண நிதியக் கணக்கிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. | அமுல்படுத்துவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். | அத்தகைய முக்கிய பணிகளைச் செயற்படுத்துவதற்கும் சொந்த வருமானத்தை உழைத்து கொள்வதற்குமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

### (ஆ) வீடமைப்பு அதிகாரசபை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 129 வீடுகளை புனரமைப்பதற்காக ரூபா 22.96 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 72 வீட்டுடமையாளர்களுக்கு வீடுகளை சீரமைப்பதற்காக கூட்டுமொத்தம் ரூபா 18.06 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. இதனால் மீளாய்வாண்டுக்கான புனரமைப்புப் பணிகளுக்கு வசதி செய்யப்படாததால் 57 வீட்டுடமையாளர்கள் பாதிக்கப்பட்டிருந்தனர். | நிதி ஒதுக்கீட்டின் பற்றாக்குறை காரணமாக புனரமைப்பு வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வேலைகளுக்கான ஒதுக்கீட்டினை பெறும் பொருட்டு பாதீட்டினை சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

**(இ) வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட 33 உத்தியோகத்தர்களுக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அவர்களது பதவியணி அங்கீகரிக்கப்படாமல் மீளாய்வாண்டில் ரூபா 13.23 மில்லியன் தொகையான ஆளணி வேதனங்கள் செலுத்தப்பட்டிருந்தது. | 24 அலுவலர்கள் ஆளணி அங்கீகரிக்கப்பட்டிருக்காத நிலையில் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்பிக்கப்பட்டிருந்தனர் | ஆளணியினர் அனுமதிக்கப்பட்டிருக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |